From-39

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.

C.C.No.51/2018

Deposition of witness for: PW - 6

| | | | |
|---|---|---|---|
| Name | : தெய்வேந்திரன் | Father/Husband Name:தொத்தன். | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | :22.11.2018 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2018.

முதல் விசாரணை:

நான் சென்னகரம்பட்டியில் வசிக்கிறேன். கூலிவேலை செய்கிறேன். அ.சா.1,2ஐ தெரியும். எதிரிகள் எனது அக்கா மகன்கள். சுமார் 3 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் காலையில் வாதி மற்றும் எதிரிகளின் வீட்டிற்கு அருகில் சண்டை நடந்ததாக சம்பவத்திற்கு மறுநாள் மருத்துவமனையிலி சிகிச்சையிலிருந்த பெருமாளை பார்க்க சென்றபோது பெருமாள் என்னிடம் சம்பவம் பற்றி சொன்னார். அவர் என்னிடம் கம்பியை வைத்து சிவலிங்கம் பெருமாளை அடித்ததாக சொன்னார். சிவலிங்கம் அருவாளால் சாட்சி தனலெட்சுமியை தலையில் அடித்து காயப்படுத்தியதாக சொன்னார். நான் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை, விலக்கிவிடவுமில்லை. போலீசார் என்னை விசாரித்தனர்.

> அரசுதரப்பில் இந்த சாடசியை பிறழ்சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வேண்டப்பட்டது. சாட்சியின் வாக்குமூலம் மற்றும் ஆவணங்களைபரிசீலனை செய்து இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 154ன்கீழ் அனுமதி வழங்கப்பட்டது.

குறுக்கு விசாரணை அரசுதரப்பில்:

போலீசார் விசாரணையில் கடந்த 18.01.14ம் தேதி மாலை 06.45 மணிக்கு எதிரி சிவலிங்கமும், மணிகண்டனும் அ.சா.1ஐ அசிங்கமாகபேசி சிவலிங்கம் என்பவர் கத்தியால் அ.சா.1ஐ குத்தவந்தபோது அவர் விலகிக்கொண்டதால் அவரது மகன் மச்சராஜா என்பவருக்கு வலதுகை கட்டைவிரலில் காயம் ஏற்பட்டதாகவும், மேலும்

1வது எதிரி மச்சராஜாவை அடித்ததில் அவருக்கு முதுகில் காயம் ஏற்பட்டதாகவும், 1வது எதிரி தனலெட்சுமி என்பவரை கத்தியால் இடதுகை முழங்கைக்குமேல் வெட்டி காயப்படுத்தியும், 2வது எதிரி கம்பியால் அ.சா.1ன் தலையின் அடித்து காயப்படுத்தியும் , 2வது எதிரி மூர்த்தி என்பவரை கல்லால் அடித்து வலதுதோள்பட்டை, இடது நடுவிரல் ஆகியவற்றில் காயப்படுத்தியதாகவும் அப்போது நானும் அருகிலிருந்தவர்களும் விலக்கிவிட்டபோது எதிரிகள் கம்பி, கத்தி போன் ஆயதங்களை காட்டி உங்களை கொல்லாமல் விடமாட்டோம் என்று மிரட்டியதாகவும் சொல்லிவிட்டு எதிரிகள் உறவினர்கள் என்பதால் உண்மையை மறைத்து எதிரிகளுக்கு சாதகமாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

From-39

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.

C.C.No.51/2018

Deposition of witness for: PW - 7

Name : சேவுகன் Father/Husband Name:தஅம்மாசி.

Village : Taluk :

Caste : Calling :

Religion : Age :

Date :22.11.2018

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2018.

முதல் விசாரணை:

நான் சென்னகரம்பட்டி நடுப்பட்டியில் வசிக்கிறேன். கொத்தனார்வேலை செய்கிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரிலுள்ள முதலாவது கையெழுத்து என்னுடையதுதான். கடந்த 19.01.14ம் தேதி மாலை 04 மணிக்கு சம்பவ இடத்தில் சார்பு ஆய்வாளர் வந்து சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைபயடம் தயார் செய்து பார்வை மகஜரில் என்னிடமும் சரவணனிடமும் கையெழுத்து கேட்டார்கள் கையெழுத்து செய்தோம். பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆகும். போலீசார் என்னை விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை:

சந்தர்ப்பம் அளித்தும் செய்யவில்லை.

From-39

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.

C.C.No.51/2018

Deposition of witness for: PW - 8

| | | | |
|---|---|---|---|
| Name | : சரவணன் | Father/Husband Name: சேவுகன். | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | :22.11.2018 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2018.

முதல் விசாரணை:

நான் சென்னகரம்பட்டி நடுப்பட்டியில் வசிக்கிறேன். கூலிவேலை செய்கிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரிலுள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையதுதான். கடந்த 19.01.14ம் தேதி மாலை 04 மணிக்கு சம்பவ இடத்தில் சார்பு ஆய்வாளர் வந்து சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைபயடம் தயார் செய்து பார்வை மகஜரில் என்னிடமும் சேவுகனிடமும் கையெழுத்து கேட்டார்கள் கையெழுத்து செய்தோம். போலீசார் என்னை விசாரித்தனர்.

குறக்கு விசாரணை:

சந்தர்ப்பம் அளித்தும் செய்யவில்லை.